மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள், சென்னை -6

ந.க.எண். 2073/தி3/2022, நாள் 26 .10.2022

பொருள் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் வகுப்பறை செயல்பாடுகளை உற்று நோக்குதல் - சார்பாக.

---

தேனி, புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கரூர் ஆகிய 5 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட உள்ள பள்ளிகளில் 8 வகுப்பு வகுப்பறையில் தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகிய பாடங்களின் வகுப்பறை செயல்பாடுகளை உற்றுநோக்கி தரவுகளை சேகரிக்கும் ஆய்வினை மேற்கொள்ள மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்த ஆய்வினை மேற்கொள்ளுதல் தொடர்பாக கீழ்க்காணும் வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகிய பாடங்களை சார்ந்த இரண்டு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதுநிலை விரிவுரையாளர்கள்/ விரிவுரையாளர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். ஏதேனும் பாடத்தில் முதுநிலை விரிவுரையாளர் அல்லது விரிவுரையாளர்கள் இல்லாத நிலையில் வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநரை தெரிவு செய்ய வேண்டும். எனவே, மொத்தமாக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 10 கல்வியாளர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 பள்ளிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். பள்ளிகளைத் தெரிவு செய்யும்போது, கீழ்க்காணும் அனைத்து வகைப் பள்ளிகளும் இடம்பெறும் வகையில் பள்ளிகளைத் தெரிவு செய்ய வேண்டும்.

  பள்ளி மேலாண்மை வகை - அரசு, அரசு உதவிபெறும் மற்றும் பிற அரசுத் துறைப்பள்ளிகள்

  பள்ளி மாணவர் சார்ந்து - ஆண்கள், பெண்கள், இருபாலர் பள்ளிகள்

  பள்ளி அமைவிடம் - கிராமப்புற மற்றும் நகர்புறப் பள்ளிகள்

  - மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றியங்களிலிருந்தும் பள்ளிகள் தெரிவு செய்யப்பட வேண்டும்.
  - தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடங்களைச் சார்ந்த கல்வியாளர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட வேண்டும்.

- ஒவ்வொரு குழுவும் நவம்பர் மாதத்தில் 07ஆம் தேதியிலிருந்து தொடர்ச்சியாக 10 வேலை நாட்களில் ஒரு நாளைக்கு ஒருபள்ளி வீதம், 8ஆம் வகுப்பில் வகுப்பறை செயல்பாடுகளை உற்றுநோக்க வேண்டும். மேலும், அந்தந்த பாட கல்வியாளர் அந்தந்த ஆசிரியரிடம் கலந்துரையாடலை நடத்தி தரவுகளை சேகரிக்க வேண்டும்.
- இக்குழுக்கள் பள்ளிகளுக்கு சென்று உற்றுநோக்கல் மற்றும் கலந்துரையாடலை மேற்கொள்வதை பள்ளிகளுக்கு முன்னரே தெரிவிக்கக் கூடாது.
- எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 பள்ளிகள் உற்றுநோக்கப்படும். மொத்தமாக 5 மாவட்டங்களில் 100 பள்ளிகள் உற்றுநோக்கப்படும்.
- உற்றுநோக்கல் படிவம் மற்றும் கலந்துரையாடல் வினாக்கள் குறித்து எம்.ஜி.ஆர் நூற்றாண்டு கட்டிடத்தில் முதல் தளத்தில் உள்ள மாநாட்டு கூடத்தில் 01.11.2022 அன்று நடைபெறவுள்ள பயிற்சியில் ஆய்வாளர்களுக்கு விளக்கம் அளிக்கப்படும். ஆய்வாளர்கள் 02.11.2022 அன்று சென்னையில் உள்ள இரண்டு பள்ளியில் உற்றுநோக்கல் மற்றும் கலந்துரையாடுதலை மேற்கொண்டு, படிவங்களை நிரப்பவேண்டும். அதே பள்ளியில் ஆய்வாளர்கள் நிரப்பிய படிவங்கள் மேலாய்வு செய்யப்பட்டு, தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும். ஆய்வாளர்களுக்கான தங்குமிட வசதி சென்னை, எழும்பூர், எத்திராஜ் சாலையில் உள்ள ஹோட்டல் காஞ்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- படிவங்களை நகல் எடுத்தலுக்குத் தேவையான செலவினம் மற்றும் முதுநிலை விரிவுரையாளர்/ விரிவுரையாளர்/ வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் பள்ளிகளுக்குச் செல்வதற்கான பயணப்படி மற்றும் தினப்படியினை அரசு விதியின்படி அந்தந்த மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன பயிற்சி நிதியிலிருந்து மேற்கொள்ள சார்ந்த முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

எனவே, தெரிவு செய்யப்பட்ட 5 மாவட்டங்களின் மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன முதல்வர்கள் மேற்குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றி ஆய்வாளர்களையும், பள்ளிகளையும் முதன்மை கல்வி அலுவலர்களுடன் கலந்து ஆலோசித்து தெரிவு செய்ய வேண்டும்.

ஆய்வாளர்களுக்கான பயிற்சி மற்றும் பள்ளிப்பார்வையில் கலந்து கொள்ள ஏதுவாக சார்ந்த முதல்வர்கள் சென்னையில் நடைபெறவுள்ள பயிற்சிக்கு ஆய்வாளர்களை அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இப்பயிற்சியின் கருத்தாளராக முனைவர் நா.சத்தி, உதவிப்பேராசிரியர் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் முனைவர் ந.இராஜேந்திரன்,

முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், கோத்தகிரி ஆகியோர் செயல்படுவார்கள். எனவே, சம்பந்தப்பட்ட முதுநிலை விரிவுரையாளரை பயிற்சி நாட்களில் பணிவிடுப்பு செய்யுமாறு கோத்தகிரி மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன முதல்வர் அறிவுறுத்தப்படுகிறார்.

மாநில அளவிலான பயிற்சியில் கலந்துக் கொள்வதற்கான பயணப்படி மற்றும் தினப்படியினை அரசு விதிகளின்படி அந்தந்த மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தின் பயிற்சி நிதியிலிருந்து வழங்குமாறு சம்மந்தப்பட்ட முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

27/10/22

இயக்குநருக்காக

26/10/2022

பெறுநர்

1. தேனி, புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், கரூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. தேனி, புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், கரூர் மற்றும் கோத்தகிரி மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன முதல்வர்கள்.